Gr 10/2025/DT.Cons.Tech முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மூன்றாம் **தவணைப் பரீட்சை** – 2025
3rd Term Exam – 2025

வடிவமைப்பும் நிருமாணத்தொழினுட்பவியலும்	**Grade 10**	**T**	**88**

3 மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**

பகுதி 1

01. மூன்று கேத்திரகணித உருவங்களின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகையின் பெறுமானம் 180^0, 360^0, 540^0 எனின், அதற்குப் பொருத்தமான கேத்திரகணித உருவங்கள் முறையே

1. முக்கோணி, வட்டம், ஐங்கோணி ஆகும்
2. முக்கோணி, நாற்பக்கல், அறுகோணி ஆகும்
3. வட்டம், நாற்பக்கல், ஐங்கோணி ஆகும்
4. அரைவட்டம், முக்கோணி, எழுகோணி ஆகும்

02. ஒரு வட்டத்தின் ஆரை 40mm உம் மற்றைய வட்டத்தின் ஆரை 30mm உம் ஆகும்.
இவ்விரு வட்டங்களும் ஒரு புள்ளியில் தொடுகையுறுவதற்கு அவ்விரு வட்டங்களினதும் மையங்களுக்கிடையேஉள்ள நீளத்திற்குச் சமமாக இருக்குமாறு வரையப்பட வேண்டிய கோட்டின் நீளம்

1. 40mm ஆக இருத்தல் வேண்டும்
2. 60mm ஆக இருத்தல் வேண்டும்
3. 70mm ஆக இருத்தல் வேண்டும்
4. 80mm ஆக இருத்தல் வேண்டும்

03. கூம்பொன்றை அதன் நிலைக்குத்து அச்சுக்குச் சமாந்தரமாக வெட்டுவதனால் கிடைக்கும் மேற்பரப்பின் வடிவம்

1. பரவளைவு
2. அதிபரவளைவு
3. வட்டம்
4. நீள்வளையம்

04. பொறியியல் வரைதல் நடவடிக்கையின் போது 2H வகைப் பென்சில் பயன்படுத்தப்படுவது

1. மெல்லிய கோடுகளை வரையவும் எழுத்துக்களைப் பதிப்பதற்குமாகும்
2. முடிவு, ஓரக் கோடுகளை வரைவதற்காகும்
3. முறிந்த கோடு, மறைநிலை விளிம்பு ஆகியவற்றை வரைவதற்காகும்
4. அடிப்படைக்கோடு, முன்திட்டப்படம் ஆகியவற்றை வரைவதற்காகும்

05. புறத்தேயுள்ள புள்ளியொன்றிலிருந்து வட்டமொன்றிற்கு வரையத்தக்க தொடலி/ தொடலிகளின் எண்ணிக்கை

1. 1
2. 2
3. 4
4. 360

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

06. பதார்த்தமொன்றின் பொறிமுறை இயல்பாக **அமையாதது**
1. இழுவை 2. உருகுநிலை 3. நெருக்கல் 4. மீள்சக்தி

07. குறித்த திரவியமொன்றை இழுத்தல் அல்லது நெருக்குதலுக்கு உட்படுத்துவதனால் அந்தத் திரவியத்தின் ஆரம்ப வடிவத்தில் ஏற்படும் மாற்றம்
1. நொருங்குமியல்பு எனப்படும்
2. உருகுதகவு எனப்படும்
3. உருத்திரிவு எனப்படும்
4. நீட்டத்தகுமியல்பு எனப்படும்

08. வளர்ச்சியின் போது காற்றின் காரணமாக மரத்தின் தண்டில் முறுக்கம் ஏற்படுவதன் விளைவாக ஏற்படும் அரிமரக் குறைபாடு
1. மிண்டு 2. சோற்றிமரம் 3. கணு(முடிச்சு) 4. குறுக்குச்சிராயி

09. அதிக நிறை கொண்ட கதவுகள் மற்றும் படலைகளைப் பொருத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பிணையல் வகை
1. கழற்றமுடியாத படலைப் பட்டிப் பிணையல்
2. முளையாணிப் பிணையல்
3. பட்டைப் பிணையல்
4. வெளவால் பிணையல்

10. சீவப்பட்ட அரிமரப் பகுதியின் விளிம்பிற்கு 90^0 கோணத்தில் கோடுகளை வரைவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்
1. நீர்மட்டம் 2. மூலைமட்டம் 3. அலிஸ்கூர் 4. வரைகம்பு

11. பின்வருவனவற்றில் இலங்கையின் மிகப்புராதன கட்டுமாணம் எது?
1. தாமரைக் கோபுரம் 2. கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம்
3. ஒன்பது வில்லுருக்களைக் கொண்ட பாலம் 4. ஆயிரங்கால் மண்டபம்

12. செங்கற் சுவர்க்கட்டொன்றின் கிடைத்தன்மை, நிலைக்குத்துத் தன்மை ஆகியவற்றைப் பரீட்சிப்பதற்கெனப் பயன்படுத்தத்தக்க உபகரணம்
1. குத்தளவுக்கோல் 2. மூலைமட்டம் 3. நீர்மட்டம் 4. மட்டக்கோல்

13. பின்வரும் பொருத்திகளில் யன்னலைப் பூட்டுவதற்கெனப் பயன்படுத்தப்படும் கட்டமைப்பு எது?
1. யன்னல் வளையங்கள்
2. பிணைச்சல்கள்
3. கொளுக்கியும் பானாவும்
4. திறாங்குகள்

14. சீவி ஒப்பமாக்கப்பட்ட அரிமரப் பாகத்தில் விளிம்புக்குச் சமாந்தரமாக தேவையான இடைவெளியில் இரண்டு கோடுகளை ஒரே தடவையில் வரைவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
1. பொளிவரைகம்பு 2. வரைகம்பு 3. தரங்குமானி 4. மூலைமட்டம்

15. கட்டுமாணப் பணிகள் நடைபெறும் இடமொன்றில் சீமெந்துச் சாந்து, கொங்கிறீற்றுக் கலவை ஆகியவற்றுக்குத் தேவையான சீமெந்து, கரட்டுப் பரப்பிகள் ஆகியவற்றை அளந்தெடுக்க தொழிலாளர்கள் பயன்படுத்தும் நியம உபகரணம் எது?
1. தாச்சி 2. மாணிப்பெட்டி 3. வாளி 4. சவள்

16. அரச மரக்கூட்டுத்தாபன வகைப்படுத்தலுக்கமைய முதிரை, ஹல்மில்ல, மகோகனி, ஆகிய அரிமரங்கள் அடங்குவது
1. அதிஉயர் ஆடம்பர வகுப்பிலாகும்
2. முதற்தர வகுப்பிலாகும்
3. ஆடம்பர வகுப்பிலாகும்
4. விசேட உயர் வகுப்பிலாகும்

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

17. குறித்த பொருளொன்றின் அளவீடு, முடிப்பு, திரவியம், வடிவம், வகை, விலை போன்ற தேவைகளை விவரமாகக் காட்டுதல் அப் பொருளுக்குரிய
1. நியதிகளாகும்
2. விவரக்கூறுகளாகும்
3. நியமங்களாகும்
4. பயன்பாடுகளாகும்

18. கடதாசி வகைப்படுத்தலின் சர்வதேச நியமங்களுக்கு அமைய 80gsm எனப்படுவது
1. ஒரு சதுர மில்லி மீற்றர் கடதாசியின் நிறை 80 கிராம் என்பதாகும்
2. ஒரு சதுர சென்ரிமீற்றர் கடதாசியின் நிறை 80 கிராம் என்பதாகும்
3. ஒரு சதுர மில்லிமீற்றர் கடதாசியின் நிறை 80 கிலோகிராம் என்பதாகும்
4. ஒரு சதுர மீற்றர் கடதாசியின் நிறை 80 கிராம் என்பதாகும்

19. படத்தில் காட்டப்பட்டுள்ள மர அளறல்



1. குடலளறல்
2. நட்சத்திர அளறல்
3. கிண்ணவடிவஅளறல்
4. சுளையலறல்

20. காற்றோட்டப் பலகணி, சிறிய யன்னல் போன்றவற்றை அரைவட்ட வடிவில் திறப்பதற்கும் மூடுவதற்கும் பயன்படுத்தப்படும் மென்னுருக்கினால் அல்லது பித்தளையினால் தயாரிக்கப்பட்ட பிணையல் வகை யாது?
1. முளையாணிப் பிணையல்
2. ஒருமைப்பிணையல்
3. பட்டைப்பிணையல்
4. வாற்பிணையல்

21. அரிமரக்குற்றியின் குறுக்கு வெட்டு முகத்தில் ஆண்டுவளையங்கள்
1. சோற்றி மையவிழையப் பகுதியிலிருந்து பட்டை வரை ஆரைக்குரிய வகையில் தென்படும்
2. சோற்றிப் பகுதியில் மட்டும் நாற்பக்கல் வடிவில் தென்படும்
3. சோற்றி மையவிழையத்தைச் சுற்றிவர வளையங்களாகத் தென்படும்
4. உட்புறப் பட்டைப் பகுதியில் மட்டும் தென்படும்

22. செங்கற்கள் முறுகலடைவதற்குக் காரணம்
1. அவை குறைவாகச் சுடப்பட்டிருக்கின்றமை
2. அவை கூடுதலாகச் சுடப்பட்டிருக்கின்றமை
3. அவற்றை செய்ய பயன்படுத்தப்படும் களிமண் பதப்படுத்தப்படாமை
4. அவற்றை செய்ய பயன்படுத்தப்படும் களிமண்ணில் கழிவுகள் காணப்படுதல்

23. சோதனை மூலைமட்டம் பயன்படுத்தப்படாத ஒரு சந்தர்ப்பம்
1. பலகைகளை வெட்டும் போது அதன் விளிம்புகளுடன் 45^0 கோணத்திலும், 90^0 கோணத்திலும் கோடுகளை வரைதல்
2. மரத்தின் மட்டத்தைப் பார்க்கும் போதும் சீவும்போதும் செங்கோணவியல்பைச் சோதித்தல்
3. மர அங்கங்களைக் கோர்க்கும் போது அப் பகுதிகளுக்கிடையே செங்கோணவியல்பைச் சோதித்தல்
4. மர அங்கங்களின் அளவீடுகளைச் செவ்வை பார்த்தல்

PAST PAPERS WIKI

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

24. குறித்த ஒரு பொருளுக்கு வெப்பத்தை வழங்குவதன் மூலம் அப் பொருளைத் திரவமாக மாற்றும் ஆற்றல்

1. நெகிழ்வு 2. நொறுங்குமியல்பு 3. உருகுதகவு 4. மீள்தன்மை

25. தண்டுகளைக் காரியப்படுத்தல் மூலம் பெறப்படும் மரம்

1. செயற்கைமரம் எனப்படும்
2. இயற்கைமரம் எனப்படும்
3. தயார் செய்த மரம் எனப்படும்
4. உற்பத்தி செய்த மரம் எனப்படும்

26. ஒட்டுப்பலகை தயாரிப்பின்போது பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களாவன

1. மெல்லியதாக அரியப்பட்ட மரப்படலும் ஒட்டுப்பதார்த்தமும்
2. மரத்தூளும் ஒட்டுப்பதார்த்தமும்
3. சிறிய அரிமரச் சிம்புகளும் ஒட்டுப்பதார்த்தமும்
4. மரக்கூழும் ஒட்டுப்பதார்த்தமும்

27. நிருமாணிப்புப் பதார்த்தமொன்றில் நிலவும் மேற்பரப்பு இழுவிசை

1. இரசாயன இயல்பாகும்
2. பௌதிக இயல்பாகும்
3. வெப்ப இயல்பாகும்
4. பொறிமுறை இயல்பாகும்

28. "கிறியோசோற்று" எனும் இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்படுவது

1. அரிமர நற்காப்புக்காகும்
2. கொங்கிறீற்றை இறுகச் செய்வதற்காகும்
3. உலோகப் பாகங்களில் துருப்பிடித்தலைத் தவிர்ப்பதற்காகும்
4. சீமெந்தின் இறுகும் காலத்தைக் கட்டுப்படுத்துவதற்காக

29. திரவியமொன்று உடையாது, நொறுங்காது இழுக்கவும் வளைக்கவும் கூடியதாகக் கொண்டுள்ள ஆற்றல்

1. உருகுதன்மை 2. நெகிழுமை 3. வாட்டத்தகவு 4. மீள்தன்மை

30. சழிதல் கூம்பு பயன்படுத்தப்படுவது

1. கட்டடம் கட்டப்படும் நிலத்திலுள்ள மண்ணின் இழையமைப்பை பரீட்சிப்பதற்காகும்
2. செங்கற்கள் உரிய கனவளவு கொண்டனவா எனப் பரீட்சிப்பதற்காகும்
3. கொங்கிறீற்றுக் கலவையிலுள்ள கரட்டுப் பரப்பிகளின் வடிவத்தைப் பரீட்சிப்பதற்காகும்
4. கொங்கிறீற்றுக் கலவையின் வேலை செய்யத்தக்க ஆற்றலைப் பரீட்சிப்பதற்காகும்

31. வேலையொன்றைச் செய்யும் போது தொழில் வினைஞர் ஒருவரால் எப்போதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய விடயம் யாது?

1. பொருள்களின் சிக்கனம்
2. வேலையை விரைவில் பூர்த்திசெய்தல்
3. அதிகதரமான பதார்த்தங்களைப் பயன்படுத்தல்
4. தனிநபர் பாதுகாப்பு

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

32. செங்கல் தயாரிப்பதற்கென கலந்து வைக்கப்பட்ட களிமண் குவியலில் மரவேர் மற்றும் தடித்துண்டுகள் காணப்பட்டன. இந்தக் களிமண்ணைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட செங்கற்களை உலர்த்திய பின்னர் சூளையில் சுடுவதனால்

1. செங்கற்களினுள் குழிகள் உருவாகும்
2. சுடப்படாத செங்கற்கள் கிடைக்கும்
3. செங்கற்களின் பௌதிக இயல்புகள் விருத்தியடையும்
4. சுடப்படாத செங்கற்கள் கிடைக்கும்

33. சாந்து பூசப்படும் மேற்பரப்பொன்றில் உள்ள நுண்ணிய குழிகளை அகற்றி மட்டப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?

1. மேசன்கரண்டி 2. மாலிடல் கரண்டி 3. மணியாசுப்பலகை 4. கூர்நுனிக்கரண்டி

34. ஒரு வித்திலைத் தாவரத்தின் புற இயல்பு

1. இலை நரம்புகள் வலையுரு அமைப்பில் இருத்தல்
2. பிரதான தண்டிலிருந்து கிளைகள் உருவாதல்
3. அகலமான அல்லது அங்குரம் உள்ள மெல்லிய இலைகள் இருத்தல்
4. இலைகள் ஒடுக்கமாக நீண்டு இருத்தல்

35. யன்னற் சிறகில் கண்ணாடியைப் பொருத்துவதற்கு உகந்த ஆணியின் வகை

1. ஹிம்பிஆணி 2. மென்றகட்டு ஆணி 3. ரின்ராக் ஆணி 4. முட்கம்பிஆணி

36. படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்

1. வரைகம்பு
2. பொளிவரைகம்பு
3. வரையூசி
4. வரைகத்தி



37. கொங்கிறீற்றை இறுக்குதல் பற்றிய சரியான கூற்று யாது?

1. இறுக்கும் போது கூடுதலான நீர் வெளியேறும்
2. இறுக்கும் போது உள்ளே வளிக்குமிழ்கள் வெளிவரும்
3. இறுக்கும் போது சீமெந்திலிருந்து வெளியேற்றப்படும் வெப்பம் கட்டுப்படுத்தப்படும்
4. இறுக்கும் போது கொங்கிறீற்று பதப்படுத்தப்படும்

38. படத்தில் காட்டப்பட்டுள்ள பூட்டு எவ்வகையானது?

1. பொளிப்பூட்டு
2. அலுமாரிப்பூட்டு
3. பெட்டகப்பூட்டு
4. விளிம்புபூட்டு



39. கொங்கிறீற் பாவனையின் போது அதில் வலுவூட்டும் பொருளாகப் பாவிக்கப்படுவது?

1. மணல் 2. சீமெந்து 3. மென்னுருக்கு 4. கொங்கிறீற்

40. நிர்மாணிப்பு வேலைகளின்போது கூரைகளுக்கு பாவிக்கப்படும் பொருட்களில் உடல் நலத்திற்கு கேடுவிளைவிற்கும் பொருள் என்று அண்மைக்காலங்களில் கண்டறியப்பட்ட பொருள்?

1. தகரம் 2. அசுப்பெஸ்ரோஸ் 3. ஓடு 4. அலுமினியம்

(40 புள்ளிகள்)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

பகுதி 2

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக. முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும், ஏனைய வினாக்களிற்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

1. அ. பேரியச்சு 90mm ஆகவும், சீறியச்சு 60 mm ஆகவும் உள்ள ஒரு நீள்வளையத்தை யாதாயினும் ஒரு முறைக்கேற்ப வரைக. அமைப்புக்கோடுகள் தெளிவாக இருத்தல் வேண்டும். நீங்கள் நீள்வளையத்தை அமைப்பதற்குப் பயன்படுத்திய முறைக்குரிய பெயரையும் எழுதுதல் வேண்டும்

   ஆ. 60mm பக்கநீளமுள்ள ஒழுங்கான எழுகோணியை யாதாயினும் ஒரு முறைக்கேற்ப வரைக. அமைப்புக்கோடுகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

   இ. மையங்களுக்கிடையிலான தூரம் 100mm ஐயும் 25mm வீதம் ஆரைகளையும் கொண்ட இரண்டு வட்டங்களை வரைந்து, அவற்றுக்குப் பொதுவான புறத்தொடலியொன்றை வரைக

(7+6+6=20)

02. " நிருமாணிப்புச் செயன்முறையில் "தனிநபர் பாதுகாப்பு" முக்கியமானதாகும்

I. கட்டடம் கட்டும் இடமொன்றினுள் நுழையும் நபர் ஒருவருக்கு முதலில் காணக்கிடைக்கும் பாதுகாப்புத் தொடர்பான எச்சரிக்கை அறிவுறுத்தல் யாது?

ii. சுவர்களைக் கட்டும் இடத்தில் வேலையில் ஈடுபடும் பணியாளர்கள் அணிந்திருக்க வேண்டிய பாதுகாப்பு அணிகலன்கள் ஐந்தைப் பெயரிடுக

iii. தொழிற்சாலை வளவில் அமைந்துள்ள கட்டடம் கட்டப்படும் இடத்திற்கு அண்மையில் நடமாடும் ஊழியர்களின் பாதுகாப்புக்கென மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டை விவரிக்குக.

03. நிர்மாணத் துறையிலே பிணைப்புப் பொருளாக நீறிய சுண்ணாம்பு பயன்படுத்தப்படுகிறது

I. சுண்ணாம்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூன்று மூலப்பொருட்களைப் பெயரிடுக

ii. சுண்ணாம்புக்கல் சுடப்படும் போது நடைபெறும் இரசாயனத் தாக்கத்தினை எழுதிக்காட்டுக

iii. நீறிய சுண்ணாம்பினை களஞ்சியப்படுத்தும் போதும் கொண்டு செல்லலின்போதும் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பான படிமுறைகள் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக

04. மரப்பொருட்களின் உற்பத்தியின் போது பிரதான மூலப்பொருளாக மரத்தண்டினை சீவுவதன் மூலம் பெறப்படும் மரம் பயன்படுத்தப்படும்

I. இயற்கை மரத்தில் உள்ள இரு பண்புகளை எழுதிக்காட்டுக

ii. ஒரு வித்திலைத் தாவரத்திலே காணக்கூடிய இரு பண்புகளை எழுதிக்காட்டுக

iii. அரிமரங்களை பதப்படுத்தும் சம்பிரதாய முறைகள் 2ஐ குறிப்பிட்டு 1ஐ விளக்குக

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

05. தளபாடத்தைக் கோக்கும் போது ஆணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

i. கம்பியாணிகளை இறுக்கும் போது அரிமரம் பிளப்பதைத் தடுப்பதற்குப் பயன்படுத்தத்தக்க இரு நடைமுறைகளை எழுதுக

ii. ஓர் அரிமரத்தின் மீது இறுக்கப்பட்ட ஒரு கம்பியாணியைக் கழற்றுவதற்குத் தேவையானபோது அது மேற்கொள்ளப்படும் விதத்தை எழுதுக

iii. ஆணியின் தலையை மறைத்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் இரு உபாய முறைகளை விளக்குக.

06. கொங்கிறீற்றுக் கலவை கண்டுபிடிக்கப்பட்டமையை குடிசார் பொறியியற்றுறையின் திருப்பு முனையாகக் குறிப்பிடலாம்

i. (a)தனிக்கொங்கிறீற்றுக்கு வலியுறுத்தலைப் பிரதியீடு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாதென விளக்குக.

(b) வலியுறுத்தலை மேற்கொள்வதற்கெனப் பயன்படுத்தப்படும் வலியுறுத்திய கம்பிவகைகள் இரண்டைக் குறிப்பிடுக

ii. (a) வலியுறுத்திய கம்பிகளில் காணப்படத்தக்க குறைபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக

(b) அதிக நியமமும் தரமும் கொண்ட கொங்கிறீற்றுக் கூறொன்றைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவையென விளக்குக.

07. பின்வரும் உபகரணங்களுக்கான வரிப்படத்தை வரைந்து சிறுகுறிப்பு எழுதுக

i. உருக்கு அளவுகோல்

ii. மூலைமட்டம்

iii. தூக்குக்குண்டு

iv. நீர்மட்டம்

v. கம்பித்தூரிகை

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library